பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆனி மீ 19 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 18 ( 03 - 07 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 121

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22 A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

தரமான
✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ் சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22 A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

25

விடுதலைப் புலிகள் — இந்திய அதிகாரிகள்

# சென்னைப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பம்

## இம்முறை வெற்றியளிக்கும் என்று அமிர் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 3

சில தினங்கள் தேக்க நிலைஅடைந்திருந்த விடுதலைப் புலிகள் - இந்திய அரசு அதிகாரிகள் பேச்சு நேற்று மீண்டும் ஆரம்பமாகின.

கொழும்பு இந்தியத் தூதரகத்துடன் தொடர்புடைய வட்டாரங்களும், பேச்சுகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகித் தொடர்ந்து நடப்பதை ஊர்ஜிதம் செய்தன.

இதேவேளை இந்தப் பேச்சுக்கள் இவ்வாரத்துக்குள் எப்படியும் வெற்றியளிக்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாக கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நம்பிக்கை வெளியிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணசபை அமைப்பது பற்றி இலங்கை ஜனாதிபதியின் செயலகம் விடுத்த அறிவிப்புச் சம்பந்தமாக சென்னையில் விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) வெள்ளிக்கிழமை செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டார் அல்லவா?

அந்த அறிவித்தலில்—

ஆயுதங்களைக் கையளித்துத் தேர்தலில் பங்குபற்ற விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாகவும் —

வடக்கு — கிழக்கு இணைப்புக் குறித்து ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன வெறும் அறிக்கை வெளியிடுவதோடு நிற்காமல் பிரகடனம் ஒன்றைச் செய்ய வேண்டும் — என்றும் திரு. கிட்டு கூறியிருந்தார்.

அந்த விடயங்கள் நேற்றைய பேச்சில் ஆராயப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

சுமுக நிலையைத் தோற்றுவிப்பதில் தேக்க நிலையை ஏற்படுத்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



ஜெயலலிதா அணிக்கு அலுவலகக் கட்டடம் கிடைச்சது சரி, நெடுஞ்செழியன், பண்ருட்டி பிரிஞ்சபிறகு அது யாருக்குப் போகும்......?

## அமிர், சிவா சென்னை விரைவு

கொழும்பு, ஜூலை, 3

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம்.சிவசிதம்பரமும் செயலதிபர் அ. அமிர்தலிங்கமும் நேற்று இரவு சென்னை திரும்ப இருந்தனர்.

அதற்கு சற்று முன்னர் உதயன் செய்தியாளரிடம் திரு. அமிர்தலிங்கம் சொன்னதாவது:—

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இந்திய அரசுக்கும் இடையே தற்சமயம் நடைபெற்று வரும் பேச்சுக்கள் இவ்வாரத்துக்குள் வெற்றி அளிக்கும் என்று நாம் நம்புகின்றோம்.

பிரச்சினைகளுக்குச் சுமுகத் தீர்வு காணப்படும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

கடந்த ஆண்டு ஜூலை 29 இல் இந்திய — இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதற்கு முதல் நாள் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து பேசிய போது 1982 தேர்தல் வாக்காளர் அடிப்படையில் தான் மாகாண சபைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டோம்.

1982க்குப் பின்னர் வெலி ஓயா, மாதுறு ஓயாப் பகுதிகளில் புதிதாக 3,200 சிங்கள வாக்காளர்களும்—

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 15 ஆயிரம் சிங்கள வாக்காளர்களும் பதியப்பட்டுள்ளனர்.

1982 ஆம் ஆண்டு தேர்தல் வாக்காளர் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமானால் இவர்கள் வாக்களிக்க முடியாது.

-இப்படி திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

திரு. அமிர்தலிங்கமும், திரு. சிவசிதம்பரமும் அடுத்த வாரம் கொழும்பு திரும்புவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-உ-எ)

### மோட்டார் சைக்கிள் மாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவுக்கு முன்னால் நின்ற மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று மாயமாக மறைந்து விட்டது.

இதுவரை காலமும் யாழ். ஆஸ்பத்திரியில் சைக்கிள்களும், நகைகளுமே களவாடப்பட்டு வந்தன. (ஓ-10)

### சுபநேரம்

03 - 07 - 1988
ஆனி 19
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
8-57 முதல் 10-27 வரை
ராகுகாலம்:
04-27 முதல் 05-57 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## துணைவேந்தர் பதவிக்கு மூவர் பெயர் சிபார்சு

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு சிபார்சு செய்யப் படவேண்டிய மூவரின் பெயர்கள் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக கவுன்சில் நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழகத்தில் கூடியபோது பிரஸ்தாபகூட்டத்தில் ஆங்கில அகரவரிசைப்படி மூவரது பெயர்கள் தெரிவு செய்யப்பட்டன.

யாழ். பல்கலைக்கழகத்தின் தற்போதைய பதில் உபவேந்தர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம், கொழும்பு திறந்தவெளி பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். துரைராஜா ஆகியோரது பெயர்களே தெரிவு செய்யப்பட்டன. இந்தப் பெயர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு பல்கலைக்கழகக் கவுன்சிலால் அனுப்பிவைக்கப்

( 6ஆம் பக்கம் பார்க்க )

## அ. தி. மு. க. தலைமையகம் ஜெயலலிதா அணிக்கு

சென்னை, ஜூலை 3

சென்னை ஔவை சண்முகம் சாலையில் உள்ள அ. தி. மு. க. தலைமை அலுவலகக் கட்டடம் மேலதிக நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில் ஜெயலலிதா அணியிடம் ஒப்படைக்கப்பட்டது.

'ஜெ' அணிப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்றுத் தமது ஆதரவாளருடன் சென்று கட்டடத்தைப் பொறுப்பு ஏற்ருர்.

அ. தி. மு. க. பிளவுபட்ட சமயம் தலைமை அலுவலகக் கட்டடமும் பணிமனையும் ஜெயலலிதா அணியின் பொறுப்பில் இருந்தன என்று, மேலதிக நீதிவான் தமது தீர்ப்பில் கூறியிருந்தார். (ஓ-எ)

### செய்திச் சாரம்

#### வெள்ளியன்று மூவர் கொலை

கொழும்பு, ஜூலை. 3

தென் இலங்கையில் கடந்த வெள்ளிக்கிழமை மேலும் மூவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மொனருகலையில் அலுவலகத்தில் இருந்த கிராம சேவையாளரான ஜயசேகரா சுட்டுக் கொல்லப்பட்டார்.

கந்தரையில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த சுமணசிரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

மாத்தறையில் எச். எம். சந்திரதிலக சுட்டுக் கொல்லப்பட்டார். (ஓ-எ)

#### ஜவான் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

தவறுதலாக துப்பாக்கி வெடித்ததால் இந்திய அமைதிப்படை ஜவான் ஒருவர் நேற்று மரணமானார்.

யாழ். ரயில் நிலைய முகாமில் இச்சம்பவம் நடந்தது.

மரணமடைந்த ஜவானின் சடலம் யாழ். ரயில் நிலையப்பகுதியில் நேற்று மாலை தகனம் செய்யப்பட்டது.

தகனம் செய்யப்பட்ட சமயம் இந்திய அமைதிப்படையினரால் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

திடீர் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட போது நகரில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. (இ-10)

#### கல்யாண வீட்டிலும் தேடுதல்

புதுக்குடியிருப்பு, ஜூலை 3

உடையார் கட்டுக் கிராமத்தில் கல்யாண வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கேயும் சென்று அமைதிப் படையினர் விடுதலைப் புலிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

அங்கிருந்தவர்கள் எவரையும் வெளியேபோகக் கூடாது என்று பலமணி நேரம் தடுத்து வைத்திருந்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

இச் சம்பவத்தின் போது எவரும் கைது செய்யப்படவில்லை. (ஓ-126)

#### நாய்களுக்கு தடுப்பு ஊசி

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது அதிகரித்து வரும் விசர் நாய்க்கடி நோயைத் தடை செய்வதற்கு வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்து ஏற்றும் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கான தடுப்பு

(6-ஆம் பக்கம் பார்க்க)

# நிதி நிறுவனங்களில் மக்கள் வைப்பிடும் பணத்துக்கு அரசாங்கம் உத்தரவாதம்

## பதில் நிதி மந்திரி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யும் பொதுமக்களின் பணத்துக்கு அரசாங்கம் தகுந்த உத்தரவாதம் அளிக்கும். பொது மக்களின் வைப்பீடு பறிபோவதற்கு அரசாங்கம் அனுமதிக்காது.

—பதில் நிதி அமைச்சர் திரு. ஜோன் அமரதுங்க இவ்வாறு உறுதியளித்திருக்கிறுர்:

நிதி நிறுவனங்கள் குறித்து பொதுமக்கள் அனுவசியமாய் பீதி கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் கூறினர்.

இது தொடர்பாக அவர்மேலும் கூறியதாவது:-

நிதி நிறுவனம் ஏதும் வங்குரோத்து நிலை அடையுமானால் அவசர நிதி உதவி வழங்கி அதனைத் தடுக்க மத்திய வங்கி

(5 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலையான தமிழ் இளைஞர் திருமலைக் கச்சேரிமுன் ஆர்ப்பாட்டம்

## நிவாரணம் வழங்காததை ஆட்சேபித்து

திருகோணமலை, ஜூலை 3

தடுப்பு முகாமிலிருந்து அண்மையில் விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் திருகோணமலைக் கச்சேரிக்குச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பூஸா, பெலவத்தை, மகசின் ஆகிய சிறைச்சாலைகளிலிருந்து அண்மையில் விடுதலை செய்யப்பட்ட திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்களுக்கு அரசாங்கத்தினால் இதுவரை எதுவித நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக அரசாங்க அதிபரைச் சந்தித்து தமது குறைகளைக் கூறுவதற்காக சுமார் 300 இளைஞர்கள் சைக்கிள்களில் கோட்டைக்குள் அமைந்துள்ள அரசாங்க அதிபரின் காரியாலயத்தை முற்றுகையிட்டனர்.

இளைஞர்கள் திரளாகக் கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்தபோது, பொலீஸார் அங்கு வரவழைக்கப்பட்டனர். பொலீஸாரை அங்கிருந்து அகன்று செல்லுமாறு ஆர்ப்பாட்டம் செய்த இளைஞர்கள் கோஷமிட்டனர்.

பின்னர் பொலீஸார் அகற்றப்பட்டனர். மேல்மாடியிலிருந்த அரசாங்க அதிபர் திரு. டி. எம் ஆரியரத்தினவிற்குத் தகவல் கிடைத்ததும் இளைஞர் பிரதிநிதிகளில் நால்வரைத் தனது காரியாலயத்திற்கு வரவழைத்து அவர்களுடன் உரையாடினர்.

சிறிது நேரத்தின் பின்னர் அரசாங்க அதிபர் கீழே இறங்கிவந்து இரண்டு வாரங்களினுள் பிரச்சினைகள் தீர்த்து

(6ஆம் பக்கம் பார்க்க)

### தொழிற்சாலைக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலைக்கு பிரிட்டிஷ் தூதரகம் நிதியுதவி வழங்கும் என நம்பப்படுகிறது.

பிரஸ்தாப தொழிற்சாலையின் ஓராண்டு நிறைவு விழாவையொட்டி இங்கு விஜயம் செய்திருந்த பிரிட்டி தூதரக பிரதிநிதி திரு பி. எச். ஜோனஸ் இது குறித்து சாதகமான தகவலை வெளியிட்டிருந்தார் என அறிய வரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அடகு வைத்தோருக்கு அரசு நிவாரணம்

கொழும்பு, ஜூலை 3

மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்டெடுக்க முடியாத நிலையில் உள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிப்பவர்களுக்கு நிவாரணம் வழங்குவது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நிதி அமைச்சர் எம். எச். எம். நைனு மரிக்கார் இது சம்பந்தமாக செய்த சிபார்சை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது,

இது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானம் வருமாறு:

1983க்குப் பின்னர் செலுத்தப்படவேண்டிய வட்டியைக் கழித்து விடுவது சாத்தியமானதல்ல.

1-1-84 முதல் 1-1-88 வரை குறைந்த வட்டியை அறவிடுவது என்று சிபார்சு செய்யப்படுகின்றது.

1-1-1988க்குப் பின்னர் வட்டி எதுவும் அறவிடப்படமாட்டாது.

ஊக்குவிப்பு நடவடிக்கையாக, ஆரம்பத்தில் 10ல் ஒரு பகுதி பணத்தைச் செலுத்தும் அடகுவைத்தவர்கள் தங்கள் அடகு நகை மேலும் ஐந்து ஆண்டுகாலத்துக்கு நீடிக்கும் தகுதியைப்பெறுவர்.

இக்காலத்துக்கு மேலதிக வட்டி அறவிடப்படமாட்டாது. (இ - எ)

## பளையில் நேற்று கண்ணிவெடி

யாழ்ப்பாணம், ஜூலை 3

பளைப் பகுதியில் உள்ள இத்தாவில் என்ற இடத்தில் இந்திய அமைதிப் படையினரின் வாகனம் ஒன்று கண்ணிவெடியில் சிக்கியது.

நேற்றுக்காலை பதினொரு மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது

கண்ணிவெடித் தாக்குதல் காரணமாக அமைதிப் படையினரின் வாகனம் தடம் புரண்டதாகவும் அதன்போது அமைதிப்படை ஜவான்கள் சிலர் மரணமானதாகவும் சிலர் காயமடைந்ததாகவும் அறிய வருகிறது.

அமைதிப்படையினருக்கு மதிய உணவை ஏற்றிச் சென்ற டிரக் ஒன்றே கண்ணிவெடியில் சிக்கியது.

சம்பவம் நடந்த இடக்[illegible] சுற்றி[illegible] [illegible]திப்படை[illegible] ல இளைஞர்களை [illegible]ந்தகத்தில் அழைத்து வந்து வீதியோரத்தில் குப்புறப் படுக்க வைத்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-9-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

3 Sri தொடர் இலக்க முடைய ஒஸ்ரின் சேம் பிரிஜ் பரீனு மொடல் கார் விற்பனைக்குஉண்டு. ஈஸ்வரன் ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி. (4581)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் கட்டில் மெத்தைகள் கசற் றேடியோ சாப்பாட்டு மேசை கதிரைகள், அலுமாரி கடைசோகேஸ் கண்ணுடி மேசை ஏம்பளம், ஹோல் செற், விருந்தைக் கதிரைகள், ஸ்ரீல் அல்மாரி, தையல் மெசின் இரும்புத்தளபாடம் Baby Cot புத்தக அலுமாரி Imported Mattress மற்றும் பல வித பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென்பற்றிக்ஸ் சந்தியருகில். [4588]

பாவித்த புத்தகக் கடைக்கு அல்லது (பார்மசி) மருந்துக் கடைக்கு பாவிக்கக்கூடிய இரண்டு பெரிய சோகேஸ்கள் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன் 326 பிரதான விதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக்ஸ் சந்தி அருகில்.) (4587)

நாஷனல் JVC Akai வீடியோ டெக்கிற்கான போட்டர், வீடியோ ெட் பெல்ற், ICகள் சகல ரெலிவிஷன்களில் Flybach ரியூனர் ரியூப் மற்றைய உதிரிப்பாகங்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஓடர்களுக்கு சிங்கப்பூரில் இருந்து பெற்றுக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு Jaffna Technical Institute Stanly Road [றெயில்வே கடவை அருகே] (C/5570)

GOLDI Sausages எல்லாவகையான Saubages மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம், வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி5624)

அராலி வடக்கு சேர்ச் சிற்கு அருகில் 3 பரப்புக் காணியும் வீடும் மின்சார வசதியுடன் விற்பனைக்கு உண்டு. அதனுடன் சேர்ந்த 3பரப்புக் காணியும் 2 கடைகளும் 3 இணைப்பு மின்சாரத்துடன் விற்பனைக்குஉண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். மு. மாணிக்கம் அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. (4559)

நல்ல நிலையிலுள்ள C.D-90 Honda [கிளச் மொடல்] சிசி நம்பருடன் [3 மாதம் மட்டும் பாவிக்கப்பட்டது.] சகல தஸ்தாவேஜுக்களுடன், ... இறைச்சிக் கோழி (Broiler) விருத்துக்கு ... நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. S. ரங்கன் சந் ... பிள்ளையார் ... (5757)

... வகச்சேரி பருத்தித்துறைவீதி பெருங்குளம் சந்தி ... குகில் மில் ஒன்று ... அல்லது விற்பனைக்கு உண்டு. ... தொடர்பு: N. மகேஸ்வரன், 3 ஆம் ஒழுங்கை ... சாவகச்சேரி. (5759)

S.S.I 125 Honda [Super Sports I Model C.G 125 ரகம்] மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. ... 6.00—8.00 மணி ... 3.00—6.30 மணி வரையும் பார்வை ... இடம், Sha... Academy 247, ... Road, Jaffna. (...)

## விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அண்மையில் வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திருமதி சிற்றம்பலம் 'ராஜஸ்தான்' பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (4590)

கொக்குவில் K.K.S. ரோட் குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட காணியும், வீடும் (3½ பரப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செ. வேலாயுதபிள்ளை C/O மு. க. சின்னையா சட்டநாதர் ரோட் (அரசினர் விறகுகாலை முன் ஒழுங்கை) திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம். (4879)

Prima Lohmnan வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு சேவல் குஞ்சுகள், Hy-Line வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (C/5626)

டாலிபட்லர் அன் கொம்பனிக்கு சொந்தமான 1. Bed Hord Van (பெற்சோர்ட்) 2. Sherpa Van (சேப்பா வான்கள்) விற்பனைக்குண்டு. திங்கள் (4. 7. 88) காலை 8 மணி தொடக்கம் 4 மணிவரை பார்வையிடலாம். சிற்றி ஏஜென்சி (City Agency) 158, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4878)

### கார் விற்பனை

1976 ஆம் ஆண்டு கொம்பனி மூலம் இறக்குமதி செய்யப்பட்டு டாக்டர் உரிமையாளரால் தொடர்ந்து உபயோகிக்கப்பட்ட Peugeol 304 குறைந்த மைல் ஓட்டங்கள் ஓடிய நல்ல நிலையில் உள்ள கார் விற்பனைக்கு உண்டு. விலாசம் மயிலணி சுன்னாகம். (C. 5622)

### இறைச்சி கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும் Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி 5625)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna. Samy & Co Shabra அருகாமையில். (C5300)

### பயிற்சி

Radio-Tv Air Conditioning Refrigeration வயறிங் வெல்டிங் மோட்டர் மெக்கானிசம் ... Typing புதியபிரிவுகள் குறுகிய காலத்தில் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, ... ரோட், ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். (4574)

## தேவை

கடைச்சல் வேலையில் (லேத்) நன்கு அனுபவம் உடையவர் ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும் நொர்தேன் இன்டஸ்றீஸ் 69. பிறவுண் வீதி, கொக்குவில். (4853)

கண்ணுடி அலுமாரி, ஷோகேஸ், ராக்கை விற்க இருப்பின் தொடர்பு கொள்ளவும். C D. 125 ரு வின் மொடல் கொண்டா மோட்டார் சைக்கிள் ஒன்றும் தேவை. இ. யோககுரு திருவில் வல்வெட்டித்துறை. (4851)

ரைக்டர் மெக்கானிக் மின்தொழில் பயிற்சி உடைய ஐந்து வருட அனுபவம் உடையவர் தேவை. (2) GAS (காஸ்) றின்கர் வேலையாள் உடன்தேவை. தொடர்பு M F ரைக்டர் இன்ஜினியர். 70 கன்னதிட்டி, யாழ்ப்பாணம். (4875)

வான் சேல்ஸ்மென் (Sales Rep) உடனடியாகத் தேவை. முன் அனுபவம் உடையவர்கள் நேரில் வரவும். தகுதிக்குத் தகுந்த படி சம்பளம் கொடுக்கப்படும். லக்ஷ்மி அப்பளக் கொம்பனி யெற் மோட்டோர்ஸ் அருகாமையில், சுன்னுகம். (4868)

சிறந்த முறையில் தையல்வேலை செய்யக் கூடிய பெண்கள் தேவை. வேலைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும், விபரங்களுக்கு: ராஜா ரெயிலர் நவீன சந்தை, மேல் மாடி, இல. 8, தரன் ஸ்ருடியோவுக்கு அருகாமையில். (4874)

### பணிப்பெண் தேவை

சிங்கப்பூருக்கு பணிப்பெண் உடனடியாகத் தேவை. கத்தோலிக்க பெண்ணுக்கு முன்னுரிமை. பாஸ்போட்டுடனும் ஆறு படங்களுடனும் உடன் வரவும். T. துரைசிங்கம் 376 B, நாவலர் வீதி, அரியாலை. ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்பாக. (4870)

### பராமரிப்பு பெண்தேவை

47 வயதுடைய குடும்பத்துடன் 10 வருடம் எந்தவித தொடர்பு மற்ற எஞ்சினியர் ஒருவருக்கு பிற்கால பராமரிப்பிற்கு ஏற்ற எந்த மதேனு நிலையிலும் உள்ள ஓரளவு வீடு வசதியுள்ள 42 வயதிற்கும் குறைந்த பெண் தேவை. C/o 255 உதயன், யாழ்ப்பாணம், (4852)

## மணமகள் தேவை

குடி, புகைப் பழக்க மற்ற 45 வயதான தாரமிழந்தவர் பொற் கொல்ல இனத்தவர் கொழும்பில் தனியார் ஸ்தாபனத்தில் வேலை செய்பவர் பகுதிநேர ஆங்கில ஆசிரியருக்கு நல்ல குணமுடைய மணமகள் தேவை. C/o,268,, உதயன், யாழ்ப்பாணம். (4881)

Jaffna Hindu Vellala Bachelor, 43 - Doctorate (P. H. D) of High Standing also owning Car Invites Young Pretty Learned Girl of Merit Respond with Horoscope, Photograph and Relevant Details Strict Confidentiality Assured C/o 267 Uthayan Jaffna. (4876)

## கல்வி

ஆண்டு எட்டு முதல் பதினொன்று வரையான வகுப்புக்களுக்குத் தமிழ் கற்பிக்க விரும்பும் பகுதி நேர ஆசிரியர் தேவை. தகுதி, சம்பளம் ஆகியவற்றைக் குறிப்பிட்டுக் கையெழுத்தில் கடிதவடிவில் விண்ணபிக்க. அதிபர், மதி அக்கடமி, ஊரெழு, சுன்னுசம். (4571)

ஆண்டு 5, 6 புலமைப் பரிசிலுக்கான முன்னோடிப் பரீட்சை 9-07-88 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் 5-7-88க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மொடேண் எடியுகேஷன் சென்ரர், கரவெட்டி. (4713)

பாடசாலை விட்டு விலகியோருக்கான பகுதி நேர பயிற்சி வகுப்புகள் ஹோட்டல் முகாமைத்துவம் துறையில் ஆரம்பமாகியுள்ளது. சேர விரும்புவோர் விண்ணப்பிக்கவும். தொடர்பு, அதிபர் இராமநாதன் கல்லூரி, சுன்னுகம், (4877)

### திறப்புவிழா அழைப்பு

அளவெட்டி தெற்கு விஸ்வநாதன் வைத்திய நிலையம் 4-7-1988 திங்கள் பகல் 12 மணி சுபமுகூர்த்தத்தில் குருவானவர் சொலமன்ஸ் B.D அடிகள் ஆசீர்வதித்து திறந்து வைப்பார். அச்சமயம் சகலரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன். வைத்திய கலாநிதி த. விஸ்வநாதன். (4880)

## காணவில்லை

து. துஷ்யந்தன், 45, பலாலி வீதி, யாழ்ப்பாணம் ஆகிய எனது அடையாள அட்டை 66251063 V பலாலி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும் வண்ணம் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (4882)

இம்மானுவேல் விமலதாஸ், நாரந்தனை, I-C No, 642062573 என்னுடைய இலங்கை வங்கி (ஸ்ரான்லி ரோட்), சேமிப்புக் கணக்குப் புத்தகம் இல, 18443 யாழ். முனீஸ்வரன் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (4869)

திருமதி ம. சிவகுருநாதனின் சாரதி "லைசென்ஸ்", அவரின் காருக்குரிய pass (EN-7954) இன்சூரன்ஸ் பத்திரம், கார் லைசென்ஸ் ஆனைப்பந்தியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: யாழ். உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4873)

### வாடகைக்கு

யாழ். வளாகம் அண்மையில் சகல வசதிகள் உடைய வீடு வாடகைக்கு உண்டு. ஞாயிறு, திங்கள் காலை 8 இலிருந்து பகல் 2 வரை மட்டும் சந்திக்கவும். ஞானசுந்தரம் 19/1 செட்டித் தெரு, நல்லூர். (4600)

### திருமண சேவை

திருமணம் செய்து கொள்ளவேண்டுமா? எங்களிடம் இந்து-கிறிஸ்தவ மணமகன், மணமகள் இருக்கின்றனர். விபரங்களுக்கு Nico Traders 460, ஆஸ்பத்திரி வீதி, ... (St. John's) ... தவரும் விண்ணப்பிக்கலாம். (4863)

---

## புதுப்பிக்கப்பட்ட டயர்கள் விற்பனைக்கு

கீழ் காணும் அளவுள்ள புதுப்பிக்கப்பட்ட டயர்கள் (Re-built Tyres) விற்பனைக்குண்டு 550 / 560 / 615 / 13,520 / 590/600/ 700 / 14, 560 / 650 / 700/ 15, 600/ 650/16, 400/ 19, 700 / 750/ 825 / 900 / 20

தொடர்பு கொள்ளவும்

**நொர்தேண் இன்டஸ்றீஸ்**
**69, பிறவுண் வீதி,**
**கொக்குவில்.**

(4774)

---

## ஆனந்தம் அப்பளம்
### ஓர் சிறந்த தயாரிப்பு

பல தொழில் நுட்ப வல்லுனர்களின் ஆலோசனையின் பேரில் அப்பளத்தை நவீன முறையில் தயாரித்து வருகின்றோம் என்பதைமகிழ்ச்சியுடன் தெரியத்தருகிறோம்.

மூன்று அப்பள லேபல்களை பெயர் முகவரியுடன் அனுப்பி நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தீர்த்தத் தினத்தன்று பல பரிசுகளைப் பெறுங்கள்.

சுகாதாரமானது ஆனந்தம்!
ஆனந்தம்
சுகாதாரத்தின் உயிர் நாடி!!

**ஸ்ரீசச்சிதானந்தா எண்டர்பிறைஸ்**
ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமம்,
கைதடி.

(C 5619)

---

## நோர்வே தமிழ்ச்சங்கத்தால்

அகில இலங்கை ரீதியாக முதன்முறை நடாத்தப்படவுள்ள

## தமிழ்ச்சிறுகதை - கவிதைப் போட்டிகள்

போட்டி நிபந்தனைகளுக்கமைய தெரிவுக்காகும் முதற்சிறந்த சிறுகதைகளுக்கும் கவிதைகளுக்குமாகப் பின் வரும் பரிசுகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதற்பரிசு | ரூபா - 3000 |
| இரண்டாம் பரிசு | ரூபா - 2000 |
| மூன்றும் பரிசு | ரூபா - 1000 |

நிபந்தனைகள்:-

- பங்குபற்றுபவர் இலங்கைப் பிரஜையாகவும், தற்சமயம் இலங்கையில் வசிப்பவராகவும் இருக்க வேண்டும்.
- ஆக்கங்கள் சொந்தமானவையாகவும், போட்டி முடிவுத் திகதி வரையில் பிரசுரிக்கப்படாதவையாகவும் இருக்க வேண்டும்.
- போட்டி நடாத்துனர் குழுவின் முடிவே இறுதி முடிவாகக் கணிக்கப்படும்.
- ஆக்கங்கள் யாவும் இங்கு பின்னிணைக்கப்பட்டுள்ள கூப்பனுடன் இணைத்து கையொப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.
- போட்டி முடிவுத் திகதி: 31, ஆடி 1988.
- ஆக்கங்கள் இன்றைய யதார்த்த சூழ்நிலைகளை பிரதிபலிப்பனவாக அமைவது வரவேற்கத்தக்கது.
- ஆக்கங்கள் அனுப்புதற்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

Tamil Sangam in Norway.
P. O. Box: 88, Romsaas.
N-0907 - OSLO-9.
NORWAY.

தெரிவின் முடிவுகள் வெளியாகும் திகதி: 30, புரட்டாதி 1988.

.........................................................

சிறுகதை / கவிதை ............................ எனது சொந்த ஆக்கம் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

கையொப்பம் ............................

பெயர்: ............................

முகவரி: ............................

............ நோர்வே - தமிழ்ச்சங்கம், சிறுகதை-கவிதைப் போட்டி, 1988............

(5155)

---

## இடம்மாற்றம்
### எம். கே. எஸ். மெடிக்கல் கிளினிக்

இதுவரை காலம் சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கில் இயங்கி வந்த மேற்படி கிளினிக் 27. 06. 88 தொடக்கம் கே. கே. எஸ். ரோட் 3 ஆம் கட்டை கொக்குவிலுக்கு மாற்றப்பட்டு உள்ளது (குளப்பிட்டி சந்தியிலிருந்து வடக்கே 100 யார் தூரம்.)

Dr. மு. கனகசபை

(4773)

---

சகல
★ மோட்டார் சைக்கிள்
★ சைக்கிள்

உதிரிப்பாகங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**ஞான முருகன் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி (சந்திக்கருகாமையில்)

(4788)

---

## த. இந்திரநாதனின்
# M THREE TRAVEL'S
அளிக்கும்
## மத்திய கிழக்கு வேலை வாய்ப்புகள்

1. Security Clerk (பாதுகாவல் குமாஸ்தா) 03
2. Food Service Attendent (உணவு பரிமாறுபவர்) 10
3. Cashier (காசாளர்) 07
4. Heavy Vehicle Driver (பாரவாகன சாரதி) 07
5. Vedio Close Circuit T.V.Oporator (T.V. இயக்குநனர்) 06
6. Librarian (வாசிகசாலை பொறுப்பாளர்) 02
7. Medical Custodian (வைத்திய பாதுகாவலர் 01
8. Store Record Clerk (களஞ்சிய புத்தக குமாஸ்தா) 02
9. Receiving Clerk (பொறுப்பேற்கும் குமாஸ்தா) 04
10. Tele Switch Operator (தொலைபேசி ஸ்விச் இயக்குனர்) 02
11. Security Guard (பாதுகாவலர்) 10
12. Security Shift Leadman (பாதுகாவலர் தலைவர்) 03
13. Fire Inspector (தீ அணைக்கும் இன்ஸ்பெக்டர்) 01
14. Clerk Typhist (ஆங்கிலம்) 05
15. Welder (ஒட்டுனர்) Oxygen 03
16. Cleaning Labour (சுத்திகரிப்பாளர்) 52

நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறும்.

★ 10 படம், சடவுச்சீட்டுடன் கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**T. இந்திரநாதன்**
சோதி லேன், கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.
பஸ் வழி: 769, 763, 764.

(C-5640)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

திரு. கைலாசபிள்ளை சிவகரன்
(யாழ். மாவட்ட கடற்றொழில் பரிசோதகர்)
Mr. Kailasapillai Sivaharan
(D. F. I. - Jaffna)

தோற்றம் : 10-02-1945 — மறைவு : 03-06-1988

பாசத்தோடும், பண்போடும் எமை அரவணைத்து வந்தவேளை ஓசையின்றிப் பிரிந்து விட்ட எம் அண்ணா ஜோதியின் ஆத்ம சாந்திக்கு அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 3-7-88 ஞாயிற்றுக்கிழமை இவரது இல்லத்தில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியையிற் கலந்துகொள்ளுமாறு உற்றோர், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவறிந்து பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், ஆறுதல் அளித்த உற்றோர், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
தாய், சகோதர சகோதரிகள்.

25, கயிலாசபிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(5157)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல விதமான றேடியோ, வீடியோ டெக், T.V. மின் விசிறிகள், மின் அடுப்புகள், மின் மோட்டார்கள், கமீற், மொலினேக்ஸ் கிறைண்டர்கள், றைஸ்குக்கர், எலக்ரோனிக் கல்குலேற்ரர், சுவர்மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், ஆகியவற்றை சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

**விக்ரர் அன் சன்ஸ்**
**(விக்ரேஸ்)**
**இல. 100, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(சி 5595)

## '' கற்பகதரு ''
## தரும் வேலை வாய்ப்பு

எமது பிரதேசத்திலிருந்து ஏற்றுமதியாகும் இயற்கை தந்த பெறுமதி வாய்ந்த மூலப் பொருள் பனந் தும்பு. நிறைந்த வருமானம் ஈட்டித் தரும் பனந்தும்பு உற்பத்தியில் ஈடுபடுங்கள்.

விபரங்களுக்குப் பனை அபிவிருத்திச்சபை உற்பத்தி உத்தியோகத்தரை நாடுங்கள்.

**தலைவர்**
பனை அபிவிருத்திச் சபை,
தலைமைக் காரியாலயம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C 5613)

**தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகள் எடுக்கவும்; உங்கள் அடையாள அட்டைகளுக்கு, பிளாஸ்டிக்கவர் (Laminating) அமைக்கவும்.**

## ஞானம்ஸ் ஸ்ருடியோ
**மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(C 5580)

வரையறுக்கப்பட்ட கூட்டுறவு
வைத்தியசாலைச் சங்கம்
மூளாய் - சுழிபுரம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 - 8 - 88 ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு மூளாய் வைத்தியக் கல்லூரி புதிய மண்டபத்தில் நடைபெறும். பிரேரணைகள் அனுப்ப விரும்பும் அங்கத்தவர்கள் அவற்றை 30. 7. 88 க்கு முன் கிடைக்கக் கூடியதாக செயலாளருக்கு அனுப்பி வைக்கவும். நிகழ்ச்சி நிரல் பின்பு அனுப்பி வைக்கப்படும்.

கௌரவ செயலாளர்.

மூளாய்,
சுழிபுரம்.
1. 7. 88 (C5620)

உ
ஓம்

வேலணை மேற்கு பெரியபுலம்
மகா கணபதிப்பிள்ளையார் ஆலய

### மகா சபை 1988ம் ஆண்டிற்கான
## உறுப்பினர்களைப் பதிவு செய்தல்

மேற்படி ஆலய மகாசபை உறுப்பினர்களாகப் பதிவு செய்ய விரும்புவோர் 1988 ம் ஆண்டு யூலை மாதம் 16 ம், 17 ம் திகதிகளில் தமது உறுப்புரிமைப் பணம் ரூபா பத்தையும் விண்ணப்பத்தையும் பொருளாளர் திரு. மு. மகேந்திரன் அவர்களிடம் மேற்படி ஆலய காரியாலயத்தில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை சமர்ப்பிக்கலாம்.

மேற்படி உறுப்புரிமை கோருவோர்.

I. 18 வயது எய்தியவர்களாகவும்,
II. வேலணை மேற்கு 6 ம், 7ம், 8ம் வட்டாடாரத்தில் வசிப்பவர்களாகவும் அல்லது அவ்வட்டாரங்களில் தொடர்பு உடையவர்களாகவும் அல்லது மகோற்சவம், மாதப்பூசைகள், விசேடபூசைகள் ஆகியவற்றில் உபயகாரர்களாகவும் அல்லது கோவில் திருப்பணிகளில் பங்காற்றியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி உறுப்புரிமை வழங்கல் பற்றிய தீர்மானம் நிர்வாக சபையினரின் முடிவே இறுதியானது.

**ச. நல்லநாதன்**
தலைவர்
பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார்
ஆலய நிர்வாக சபை
1. 07. 88 (4799)

## கொலைக்கு கண்டனம்

சாவகச்சேரி ஜூலை 3

மட்டக்களப்பு பிரசைகள் குழுத் தலைவர் வணக்கத்துக்குரிய பிதா. சந்திரா பெர்னண்டோவின் படுகொலை வேதனைக்குரியதும் காட்டுமிராண்டித்தனமானதும் ஆகும்.

மட்டக்களப்பு பிரசைகள் குழுத்தலைவர் வண. பிதா சந்திரா பெர்னண்டோவின் படுகொலை குறித்து வதிரி திரு இருதயக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேற்படி பாடசாலை அதிபர் திரு. சி. வின்சன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பாடசாலை மாணவர்களும், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். (இ-70)

## ஆத்ம சாந்திக்கு ஆராதனை

குருநகர் ஜூலை -3

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட வண- பிதா சந்திரா பெர்னண்டோ அடிகளாரின் ஆத்ம சாந்திக்காக யாழ் ஆயர் தலைமையில் நாற்பத்து மூன்று குருமார் பங்கு பற்றிய கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கடந்த 30-ஆம் திகதி வியாழன் மாலை 4-30 மணிக்கு யாழ்- புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற இந்த இரங்கல் திருப்பலியில் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். (இ 51)

## மெதடிஸ்த திருச்சபையின் போட்டிகள்

யாழ்ப்பாணம் ஜூலை 3

ஜோன் உவெஸ்லி ஐயர், சாள்ர்ஸ்உவெஸ்லி ஐயர் ஆயோரின் இருதயம் அனலடைந்த 250 ஆண்டு நிறைவையொட்டி பேச்சு, பாடல் ஓவியகட்டுரைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணமெதடிஸ்த சேகரம், பருத்தித்துறை மன்னார் சேகரங்களுடன் இணைந்து இப்போட்டிகளை நடத்தவுள்ளது.

மேலதிக விவரங்களை யாழ். வண்ணார்பண்ணை மெதடிஸ்த ஆலய அருட் திரு ஏ. வி ஜெபநேசனிடம் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (இ 5)

# யாழ். ஆஸ்பத்திரியில் வாந்திபேதி நோய்
# தொற்றி வரும் அபாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து வாந்திபேதி நோய் பரவும் ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

வாந்திபேதி நோயால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படும் நோயாளர்கள் மூலம் ஏனைய நோயாளர்களுக்கும் இந்நோய் பரவுகிறது.

இதேவேளை யாழ்-குடாநாட்டில் வாந்திபேதி நோய் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரப்பட்டுள்ளது.

எனினும் யாழ்- ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படும் வாந்திபேதி நோயாளர்கள் ஏனைய நோயாளர்களுடன் வைத்துச் சிகிச்சை அளிக்கப்படுவதால், பராமரிக்கப்படுவதால் அந்த நோயாளர்களுக்கும் இந்நோய் எளிதாகப் பரவி வருகிறது.

யாழ். ஆஸ்பத்திரியின் வார்ட் வசதி போதாமையே இதற்குக் காரணம் என்று யாழ். சுகாதாரத் திணைக்கள உயரதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக யாழ்- போதனை வைத்தியசாலை பணிப்பாளரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

யாழ்-பெரியாஸ்பத்திரி போதனை வைத்தியசாலைகள் அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் வருவதால், வார்ட் போதாக்குறை குறித்து சுகாதாரத் திணைக்களம் எதுவும் செய்ய முடியாது.

ஆனால் தொற்றுநோய் பரவாது தடுக்கும் பணிகள் யாவும் சுகாதாரத் திணைக்களத்தினைப் பொறுத்ததே. ( - )

## சஞ்சீவி பொதுஅறிவு போட்டி முடிவுகள்

**சஞ்சீவி பொது அறிவுப்போட்டி இல. 7 முடிவுகள் வருமாறு;**

1-ஆவது பரிசு : நூறு ரூபா
அ. றவி,
மே/பா அல்பி ரெயிலறிங்,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

2 ஆவது பரிசு : ஐம்பது ரூபா
இ. அருள்முஜன்,
புகையிரத நிலைய அருகாமை,
மாவிட்டபுரம்.

3 ஆவது பரிசு : இருபத்தைந்து ரூபா
து. தயாசிலன்,
கருணைநிதி ச. ச. நிலையம்,
வித்தினைலை, வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

## சர்வதேச கண்ணோட்டம் பெற ஆங்கிலம் அவசியம்

மானிப்பாய் ஜூலை 3

சர்வதேச கண்ணோட்டம் பெற மாணவர்க்கு ஒரு நுழைவாயிலாக ஆங்கிலம் அமைந்துள்ளது. மாணவர்கள் தம் தாய் மொழியுடன் ஆங்கில மொழியையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

உடுவில் மகளிர் கல்லூரி தொடர் கல்வி நிறுவன ஆங்கில மன்ற துவக்க விழாவின்போது தலைமையுரை நிகழ்த்திய செல்வி. ஜெயந்தினி கந்தையா இவ்வாறு கூறினார்.

நிறுவன இயக்குனர் செல்வி ஆர்- ஜே- மான் ஆசியுரை வழங்கினார்.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி எஸ். வி. செல்லையா சிறப்புரை வழங்கினார். (சி - 90)

## கிராம அபிவிருத்திக்கு இளைஞர் பங்கு அவசியம்

கோப்பாய் ஜூலை 3

இளைஞர்களின் முயற்சியினால் ஆகாத செயல் ஒன்றும் இல்லை. கிராம அபிவிருத்திக்கு இளைஞர்களின் பங்கு மிக அவசியம்.

வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வடகோவை இளைஞர்களினால் நடாத்தப்பட்ட சிரமதானத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய விவசாயிகள் கழகத்தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவற்றுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய கழகத் தலைவர் இக்கழகம் மிகக் குறுகிய காலத்தினுள் பல சிரமதானங்களை மேற்கொண்டுள்ளது என்றார். (இ-72)

# யாழ். வரலாற்றிலேயே புதிய சகாப்தத்தை உருவாக்கும் கட்டடம்

### இந்து அதிகார சபைக் கட்டடத் திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை. 3

யாழ்ப்பாண வரலாற்றிலேயே புதிய சகாப்தத்தை உருவாக்கும் கட்டடமாக இது அமைகிறது.

முத்துத்தம்பி அனாதைகள் இல்லத்தை நிர்வகிக்கும் இந்து அதிகார சபைக்கான கட்டடத் திறப்பு விழாவில் தலைமை வகித்து உரையாற்றிய வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் லயன் அருணசலம் இப்படிக் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:—

1981 ஆம் ஆண்டு இந்தக்கட்டடம் கட்டத் தீர்மானிக்கப்பட்டது.

அப்பொழுதே நோர்வே லயன்ஸ் கழகப் பிரதிநிதி இதற்கான நிதியுதவியைத் தருவதாக வாக்களித்தார்.

ஆனால் நாட்டில் ஏற்பட்ட சூழ் நிலைகள் காரணமாக கட்டட வேலைகள் நீண்ட காலமாக தடைப்பட்டிருந்தன.

அது இப்பொழுது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தக்கட்டடம் அனாதைக் குழந்தைகளுக்கு உதவுவதற்காகவே கட்டப்பட்டது.

இப்படியான அனாதை இல்லங்களுக்கு உதவி செய்து அவற்றை வளர்க்க வேண்டியது தமிழ் மக்களின் தலையாய பொறுப்பாகும்.

இப்படி அவர் கூறினார்.

இந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பேராசிரியர் லயன் சரவணபவானந்தன் கட்டடத்தை திறந்து வைத்தார்.

லயன் சரவணபவானந்தன் உரையாற்றுகையில்; வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் முன்னின்று உழைத்ததனால் இந்த அனாதைகள் இல்லம் நல்ல நிலைக்கு வர வழிவகை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் முதற்கட்டமாகவே இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது.

அடுத்த கட்டமாக இங்கு ஓர் பால் உற்பத்தி நிலையம் அமைக்கப்படும். இப்படி அவர் கூறினார்.

இந்து அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் பரமேஸ்வரன் உரையாற்றுகையில் ''மக்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் பொதுச் சேவைகளைச் செய்யும் போது அவற்றை மறந்து அதில் ஈடுபட வேண்டும்'' என்றார்.

லயன்ஸ் பிரதி ஆளுநர் லயன் விஜயரத்தினமும் மற்றும் பலரும் உரையாற்றினர்.

மேற்படி கட்டடம் நோர்வே லயன்ஸ் கழக ஆதரவில் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினால் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-க)

## Sales Representative

A Colombo based Company wishes to recruit suitable Candidates as Sales Representative to promote sales of their Office Appliances and Steel product manufactured in Jaffna. Preference will be given to those who are proficient in Typewrting and who can read, write and Speak English well. Applicants should be between 20 and 25 years of age.

Apply on or before 11th July, 1988.

The Advertiser.
No 262, c/o Uthyan.
(c-5615)

## BECON கல்வி நிலையம்

**கலை, வர்த்தகம்**
# A/L 89
**(ஒரு வருட வகுப்பு)**
**சனி, ஞாயிறு வகுப்புகள்**

| | |
|---|---|
| பொருளியல்:- | வரதராஜன் |
| வர்த்தகம்:- | ரட்ணம் |
| கணக்கியல்:- | மரியதாஸ் |
| அளவையியல்:- | S. S. மனோகரன் |
| தமிழ்:- | மீரா |
| இந்து நாகரீகம்:- | ஜோதீஸ்வரன் |

**ஆரம்பம்: 9-7-88**
**சனி 7. 00 a. m**
# BECON
**156/3 ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
(சி 5587)

JAFFNA COLLEGE
## Institute of Technology
VADDUKKODDAI.

The only Full - Time Technical Educational Institute in the North, Providing Facilities of Hostel, Library, and Sports Extra Curricular Activities.

1988 AUGUST இல் பின்வரும் பயிற்சி நெறிகள் தொடங்கவுள்ளன.

### A. TECHNICIAN DIPLOMA COURSES (ஆங்கில மூலம்)

1. Civil Eng. 2. Mechanical Eng. 3. Electrical Eng.
4. Electronics Eng.

**கல்வித்தகைமை:** G. C. E (O/L)ல், கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச்சித்தியுட்பட 6 பாடங்களில் சித்தி.
**வயது, பால்:** 21+ க்குட்பட்ட இருபாலாரும்.
**காலம்:** Civil. 2 ஆண்டு; மற்றவை 3 ஆண்டுகள்.

### B. DIPLOMA COURSES (ஆங்கில மூலம்)

1. Draughtsmanship (civil)
2. Computer Programming & Data Processing (Module - 1 - basic, Module - 2 - cobal)

**கல்வித்தகைமை:** G. C. E (O/L) ல்' கணிதத்தில் திறமைச்சித்தியுட்பட, 6 பாடங்களில் சித்தி.
**வயது, பால்:** 22 க்குட்பட்ட இருபாலாரும்.
**காலம்:** ஓராண்டு.

### C. CRAFT CERTIFICATE COURSES (தமிழ் மூலம்)

1. இயந்திரசாலைப் பயிற்சி (Machine Shop)
2. ஒட்டுதல் (Welding)
3. உலோக வார்ப்பு (Foundry)
4. மின்இணைப்பு (Wiring)

**கல்வித் தகைமை:** G. C. E (O/L) படித்திருக்கவேண்டும்.
**வயது, பால்:** 21+ க்குட்பட்ட ஆண்கள்
**காலம்:** ஓராண்டு

### D. TRADE CERTIFICATE COURSES (தமிழ் மூலம்)

1. மேசன் வேலை (Masonry)
2. தச்சு வேலை (Carpentry)

**கல்வித் தகைமை:** 8 ஆம் வகுப்பு
**வயது, பால்:** 21 வயதுக்குட்பட்ட ஆண்கள்
**காலம்:** 3மாதம்

நிறுவன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் மட்டுமே விண்ணப்பிக்கவும். பத்திரங்களை ரூ.5/- செலுத்தி நேரடியாகவோ அன்றி ஒரு ரூபா பெறுமதியுள்ள ஆறு முத்திரைகளை அனுப்பி தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுத்திகதி 30 July 1988
நேர்முகப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

—பணிப்பாளர்
(C/5618)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்

கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

A/L 89 SAT. & SUN.
புதிய பிரிவு ஆரம்பம்
10 - 7 - 1988 [8-00]

90-ம் ஆண்டுக்கான பிரிவுகள் ஆரம்பமாக உள்ளது. பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு: பொருளியல்: திரு. கிருஷ்ணனந்தன், தமிழ்: திரு. குழந்தை, கணக்கியல்: திரு. வன்னியசிங்கம், இந்துநாகரிகம்; திரு. காரை சுந்தரம்பிள்ளை, வர்த்தகவியல்: திரு. லங்கா, புவியியல்: திரு. குணராஜா, அளவையியல்: திரு. சுப்பிரமணியம், அரசியல்: திரு. மஃறூப்

மு.குறிப்பு:- i கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படும் ஒரே நிறுவனம்.

ii கலை, வர்த்தக வகுப்புக்கள் எமது நிறுவனத்தில் மட்டுமே சிறப்பாக நடைபெறும்.

89-ம் ஆண்டுக்கான DAY CLASSES ஆரம்பமாக உள்ளது. (சி 5608)


# எங்கு குறைபாடு உள்ளதோ

## அங்கு சேவையாற்ற வேண்டும்

## வாழ்வகம் திறப்பு விழாவில் உரை

காங்கேசன்துறை ஜூலை 3

சமுதாயத்தில் இன்று அவலம், பதற்றம் நிலவும் காலத்தில் நாம் எம்மால் முடிந்தளவு சேவை செய்ய வேண்டியது அவசியம். எங்கு குறைபாடு உள்ளதோ அங்கு சென்று சேவையாற்ற வேண்டும். இன்று பணத்துக்கு கஷ்டம் இல்லை. ஆனால் பணியாற்றுவதற்குத்தான் சேவையாளர்கள் இல்லை. ஆகவே சேவையாளர்கள் உருவாக வேண்டும்.

இவ்வாறு சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெல்லிப்பளையில் அமைந்த விழிப்புலன் வலுவிழந்த மாணவர் இல்லத்தை திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு சி. சிவமகாராசா தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் பேசும் பேசுகையில் கூறியதாவது.

"தருமத்தைப் பற்றி உணரும் காலத்தில் இன்று நாம் வாழ்கிறோம். இந்த இல்லம் போன்றவைக்கு தருமம் தாராளமாகக் கிடைக்கும். அதைப் பயன்படுத்தி இவர்களும் சமுதாயத்தில் ஒரு அங்கமாக விளங்க சகலரும் பாடுபட வேண்டும்.

இவர்களின் கல்வி, தொழில் வளர்ச்சிக்கு தாராளமாக உதவ வேண்டும். இவர்களுக்கு சமுதாயத்தில் உள்ள தாழ்வுச்சிக்கலை நீக்க வேண்டியது அவசியம். அத்துடன் அவர்கள் தங்கி தம் வாழ்வை சிறப்புற அமைக்க நிரந்தர கட்டடம் அமைக்கப்பட வேண்டும் இப்படி அவர் கூறினார்.

மாவட்ட நீதிபதி திரு. எஸ். கணபதிப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:-

இவர்களுக்கு ஆற்றும் பணி மகத்தான சேவையாகும். இவர்கள் புனர்வாழ்வு சமுதாயத்துக்கு அவசியமானது. சமுதாயத்தில் நாம் ஒதுக்கப்பட்டவர்கள் என்ற சிந்தனை இவர்கள் மனதில் ஏற்படக் கூடாது. அச்சிந்தனையை ஏற்படுத்தக் கூடியவர்கள் சேவையாளர்கள்தான். சகலரது பங்களிப்பு இவ்விடயத்தில் தேவை.

வடமாகாணத்தில் முன் எப்போதும் இல்லாத அளவு தர்மசிந்தை சகலருக்கும் ஏற்பட்டுள்ளது. பெரும் பதவி வகித்தவர்கள்கூட அகதியான பின்புதான் அந்நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படியிருந்தும் சிலர் தர்மசிந்தையற்றவர்களாக உள்ளனர். அவர்களும் உதவ வேண்டியது அவசியம்.

இன்று இவர்களுக்கு கல்வி போதிக்க ஒரு ஆசிரியர் செல்வி. அ. சின்னத்தம்பி மட்டுமே உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் இளைப்பாறியதும் இவர்கள் கல்வித்திட்டம் செயற்பட முடியாது போய்விடும் என்று தெரிவிக்கப்பட்டது. அந்நிலை உருவாகாமல் பொது ஸ்தாபனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்"

இப்படி அவர் கூறினார்.

யாழ். செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வி. பாலசிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

நாட்டில் ஏனைய பகுதிகளில் பெரும் விழாக்களும் திறப்பு விழாக்களும் நடக்கும் இன்றைய காலகட்டத்தில் இங்கு துயர்துடைக்கும் விழாக்கள் நடக்கின்றன.

நாம் விழுந்தோம் எழுந்து விட்டோம் என்ற நிலையில் புனர்வாழ்வு வேலைகள் நடக்கின்றன இப்படி அவர் கூறினார்.

மற்றும் கல்வி அதிகாரி செல்வி. பெரியதம்பி, யாழ். விழிப்புலன் வலுவிழந்தோர் சங்கத்தலைவர் திரு ரவீந்திரன், றெட்பானா அதிகாரி திரு. சோதிராசா, சிவதர்மவள்ளல் திரு. கனகராசா உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

ஆசிரியை செல்வி. அ. சின்னத்தம்பி அறிமுகவுரை நிகழ்த்தினார்.

அநுவை நாகராஜன் நன்றியுரை நிகழ்த்தினார். (இ-68)

## வீடு வீடாகச் சென்று பதிவு

கொக்குவில், ஜூலை.03

இந்திய அமைதிப் படையினர் நேற்று முன்தினம் கொக்குவில் பகுதியில் வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு வீட்டிலும் வசிப்பவர்களின் பெயர்கள், அவர்களின் வயது, வேலைபார்ப்போராயின் வேலை செய்யுமிடம் ஆகிய தகவல்களைப் பதிவு செய்து சென்றுள்ளனர்.

இதற்கான காரணம் என்ன என்று அவர்களிடம் கேட்டபோது, அவர்கள் மௌனம் சாதித்தனர். (ஒ-6)

## கிறேசர் தூசியால் மின்தடை

கோப்பாய் ஜூலை -3

கோப்பாய் - கைதடி வீதியில் அமைந்திருக்கும் கிறேசரில் இருந்து எழும்பும் தூசி இப்பகுதியினூடாகசெல்லும் மின்சாரக் கம்பி இணைப்புகளில் படிவதினால் அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது. இதனால் நீர்வேலி பகுதியிலுள்ள தொழிற்சாலைகளின் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுகிறது. (இ 72)

## வலுவுள்ள சங்கம் மூலமே பயனுள்ள சேவை பெறலாம்

மானிப்பாய் ஜூலை 3

''கால்நடை வளர்ப்போர் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் வெளிநாடுகளில் பலம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. வலுவுள்ள சங்கங்கள்மூலம் பல பயனுள்ள சேவைகளை ஆற்ற முடியும்.

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்க சுன்னாகம் கிளையின் வருடாந்தக் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசிய திரு. பா. சுதர்சன் இவ்வாறு கூறினார்.

இந்தக் கூட்டம் சுன்னாகம் பயிற்செய்கை காரியாலயத்தில் நடைபெற்றபோது அவர் மேலும் கூறியதாவது-

அண்மைக் காலங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் கால்நடை வளர்ப்போர் தமது உற்பத்திப் பொருட்களான பால், முட்டை, கோழி, இறைச்சி போன்றவற்றை விற்கமுடியாது இன்னல் பட்டனர்.

எமது சங்கங்கள் சீராக இயங்கினால் இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும்.

இதுபோன்ற குறைகளை நீக்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அமைப்புகள் உதவி செய்ய முன்வந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எட்டு மிருக வைத்திய நிலையங்களை ஒன்றிணைத்து கூட்டுறவு முறை அடிப்படையில் இயங்க வைத்து கால்நடை வளர்ப்போருக்கு பல நன்மையான திட்டங்களை செயல்படுத்த யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கம் தீர்மானித்துள்ளது என்று தெரிவித்தார். (சி-90)

## நீர்வேலி விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள்

நீர்வேலி ஜூலை 3

நீர்வேலி பயிற்செய்கை அலுவலர் பகுதிக்கு உட்பட்ட, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நிலையத்தினரால் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

வைபவம் நீர்வேலி பயிற்செய்கை அலுவலர் காரியாலயத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் த. கணேசன் தலைமையில் நடைபெற்றது.

நீர்வேலி பங்குத்தந்தை வணக்கத்துக்குரிய ஸ்ரீபன் செல்வநாயகம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு காட்டுக்கத்தி, அலவாங்கு போன்ற விவசாயக் கருவிகளை நிவாரணமாக வழங்கினார்.

பயிற்செய்கை உத்தியோகத்தர் ச. இ. தவராசாவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வைபவத்தில் விவசாயிகள் புனர்வாழ்வுக்குழுத் தலைவரும், பயிற்செய்கைக்குழு உறுப்பினருமாகிய திரு. சி. நமசிவாயம், சிறுவிவசாயிகள் சம்மேளனத் தலைவர் திரு. த. மயில்வாகனம் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பயிற்செய்கை அலுவலர் இ. தவராசா நன்றியுரை கூறினார். (இ- 110)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஸ்ரீரங்கநாதன் முருகதாஸ்

தோற்றம் : 05-04-1962 மறைவு : 25-06-1986

திதி : 03 - 07 - 1988

நீ எம்மிடமிருந்து பிரிந்து
ஆண்டுகள் இரண்டு ஒடினாலும்,
எம் உள்ளத்தில் அழியாது
உன் நினைவு நிலைத்திருக்கும்
உன் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தங்கை,
உற்றார், உறவினர்.

பொற்பதி வீதி,
கொக்குவில்.

(சி 5632)



## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் டாக்டர்
திருமதி மகேஸ்வரி அருளம்பலம்

தோற்றம்: 4 - 10 - 1929 மறைவு: 13 - 7 - 1987

திதி: 2 - 7 - 88

அரியாலையைச் சேர்ந்த டாக்டர் திருமதி மகேஸ்வரி அருளம்பலம் அவர்கள் காலமாகி ஒரு ஆண்டு பூர்த்தியாகும் இந்நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்.

A. V. றோட்,
அரியாலை.

(4596)



## BECON கல்வி நிலையம்

கலை, வர்த்தகம்

A/L 89

(ஒரு வருட வகுப்பு)

பகல் நேர வகுப்புகள்

| | |
|---|---|
| பொருளியல் : | வரதராஜன் |
| வர்த்தகம் : | ரட்ணம் |
| கணக்கியல் : | மரியதாஸ் |
| அளவையியல் : | S. S. மனோகரன் |
| தமிழ் : | தாஸ் |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் |

ஆரம்பம்:- 6-7-1988

புதன் 7-00 a. m.

BECON

156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 5586) (ஸ்ரீதர் சினிமா முன்பாக)



## கள ஆய்வு உதவியாளர் பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வேண்டிய தகவல் தரவுகளை சேகரிக்கும் கள ஆய்வுகளில் (Field Studies) ஈடுபடுவதற்கு ஆற்றல், அனுபவம், ஆர்வம் உடையவர்கள் தேவை. பொருளியல், சமூகவியல், புவியியல், புள்ளிவிபரவியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உங்கள் சுயவிபரங்களைக் கொண்ட விண்ணப்பத்தினை சான்றிதழ்களின் பிரதிகளுடன் 15. 07. 88 க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்,

ஆய்வு நிறுவனம்
81/1 காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

(4793)



## உடன் தேவை

5 வருட பாமசியில் வேலை செய்த அனுபவம் உள்ள க. பொ. த. சாதாரண சித்தி எய்திய விற்பனையாளர் தேவை. தொடர்பு c/o 268, உதயன் யாழ்ப்பாணம்.

(5151)



## 2வது ஆண்டு நினைவஞ்சலி

திரு. ந. தங்கராசா (தங்கு)

கண்கவர்ந்த நாயகனே - எம்மை
கண்கலங்க வைத்து - விட்டு
விண்ணுலகில் நீ சென்ற நாள்
- முதல்
விம்மித் துடிக்கின்றோம் இன்று
- இரண்டாண்டாக!

உன் நினைவில் வாடும்:

அன்புமனைவி,
மாமன், மாமி, மச்சான்மார்,
மச்சாள்மார், மருமக்கள்

35, புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்நகர்.

(5760)



## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் காசிப்பிள்ளை கனகலிங்கம்
[உரிமையாளர்:- திவாகன் கொம்பெனி கொழும்பு 11]

தூல முகிழ்ப்பு:- 16- 11- 1943 தூல அவிழ்ப்பு:- 15- 06- 1987

திதி:- 03- 07- 1988

அப்பா! எங்கள் அன்புத் தெய்வமே!
இறந்து போனீர்களா? இல்லை
இறைவனடி சேர்ந்தீர்களா?
இல்லையில்லை இறப்பு வாழ்க்கையின்
முடிவில்லை
இறப்போ வாழ்க்கையின் தொடக்கம்

இறப்பின் மூலம் தான் ஒருவருடைய
பெறுமதி உணரப்படும். அப்பா உங்கள்
பெறுமதியை உயிருடன் இருந்த பொழுதும்
நன்றாய் உணர்ந்தவர்கள் நாங்கள்
இப்போது நன்றாய் உருகி விட்டோம்
கண்ணீர் கடலில் மிதந்து விட்டோம்
பன்னிரு மாதங்களாக நாங்கள் விட்ட
கண்ணீரும்
இனி விடப்போகும் கண்ணீரும்
உங்களுக்குரிய
அபிஷேக தீர்த்தங்களாகட்டும்
இத்தீர்த்தக் கரைகளில் உங்கள்
திருமேனி பற்றிக் கொள்ளட்டும்
தலைவனே! தந்தையே! எங்களுக்காய்
வாழ்ந்தவனே!
இனி நாங்கள் உங்களுக்காய்! அழுவது
வாழ்க்கையாகிறது
உருகும் உள்ளங்கள் என்றும்
உங்கள் நினைவில் வாழும்

அன்பு மனைவி, அருமைமகன், மக்கள்,
தாய், சகோதரர் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

35/5, குமாரசாமி வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

(4796)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.

**பொருள்:**

அரசர் விரும்புகின்றவற்றை மட்டும் சொல்லிப் பயனில்லாதவற்றை அவரே கேட்ட போதிலும் எப்போதும் சொல்லாமல் விடவேண்டும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24822 83
யாழ்ப்பாணம்.
03-07-1988 த. பெ. இல 7350


## கல்விச் சீர்கேடு எனும் நாணயத்தின் மறுபக்கம்

ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி வளர்ச்சி அடைந்த அளவுக்கு இலங்கையில் உயர்கல்வி வளர்ச்சி அடையவில்லை. உயர் கல்வியில் வளர்ச்சி ஏற்படாத பட்சத்தில் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்படும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை, வேம்படி மகளிர் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

வருடாந்தம் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்கள். ஆனால் சுமார் ஆறாயிரம் பேர் மட்டுமே பல்கலைக் கழகங்களில் சேர்க்கப்படுகிறார்கள். அதாவது ஜீ. சி. ஈ. சாதாரண தரம், அதற்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளுடன் கல்வியை முடித்துக் கொள்வோரைத் தவிர்த்து, ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவோரில் இருந்து ஆறு சதவீதமானோர் மட்டுமே உயர்கல்வி வாய்ப்புப் பெறுகிறார்கள். நாட்டின் மொத்த மாணவர் எண்ணிக்கையோடு ஒப்பிட்டால், வருடாந்தம் .006 சத வீதத்தினர் மட்டுமே உயர்கல்வி வாய்ப்பைப் பெறுகிறார்கள் என உத்தேசமாகக் கூறலாம்.

இது, நாட்டின் உயர் கல்வித் துறை வளர்ச்சி காணவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. எனவே உயர்கல்வித் திட்டம் பரவலாக்கப் பட வேண்டும். நாட்டுக்கு எட்டுப் பல்கலைக் கழகங்கள் போதா. எண்பது பல்கலைக்கழகக் கல்லூரிகளாவது தேவை.

உயர்கல்வி பெறத் தகுதியும் திறமையும் இருந்தும் அதனைப் பெறமுடியாது விடுபடும் மாணவர் நிலைமிகவும்கவலைக்கு உரியது. அவர்கள் விரக்தி நிலை அடைந்து சமூகத்துக்குப் பாரமாகவும் நாட்டில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் சக்திகளாக மாறுவதும், கல்விக் கோளாறு, கல்விக் குளறுபடி, கல்விச் சீர்கேடு என்ற நாணயத்தின் மறுபக்கமாகும்.

இது ஒரு புறமிருக்க —

பல்கலைக்கழகக் கல்வியில் கால இடைவெளியும், காலதாமதமும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதைப் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தமது உரையில் தெளிவுற விளக்கினார்.

பல்கலைக்கழக கல்வியில் வேண்டாத விதத்தில் ஏற்படுத்தப்படும் இடைவெளிகளும், தாமதங்களும், சராசரியாக பல்கலைக்கழக மாணவர்களின் 2 வருடங்களை விணடிக்கின்றன என்று அவர் எடுத்துக் காட்டினார்.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் ஜீ.சி.ஈ உயர் தரப் பரீட்சை முடிவுகள் வெளிவந்து மூன்று மாதங்களில் பல்கலைக்கழகக் கல்வியை ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது. அந்த இடைவெளி மூன்றிலிருந்து ஆறாகி, ஒன்பதாகி, இப்போது ஒரு வருடத்தையும் தாண்டி விட்டது. அது போதாது என்று இரண்டாம், மூன்றாம் வருடப் பரீட்சைகள் பின் போடப்படுவதால் ஏற்படும் தாமதங்களும் உண்டு. மேலும் பகிஷ்கரிப்பு, பாதுகாப்பற்ற சூழ்நிலை என்பவற்றால் இழக்கப்படும் — நஷ்டமாகும் — கல்வி நாட்களும் உண்டு.

மொத்தத்தில், உயர் கல்விக்குத் தகுதியெனக் காணப்பட்டதற்கும், பல்கலைக்கழகத்தில் இருந்து படிப்பை முடித்து வெளிவருவதற்கும் இடையில் ஒரு மாணவன் சராசரி தனது இரண்டு வயதுகளை வீணாக்க வேண்டியுள்ளது என்பது தெளிவாகப் புலனாகிறது.

இது பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களின் காலத்தை அவமாக்கி அவர்களின் வாழ்க்கையை இரண்டு வருடம் வீணே பின்தள்ளுகிறது.

அது மட்டுமன்றி —

2 X 6,000 = 12, 000 மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்கு வருடாந்தம் முட்டுக்கட்டை போட்டு, சந்தர்ப்பம் இல்லாமற் செய்யப்படுகிறது.

இது உயர்கல்வித்துறையின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிப்பதாகும். உயர்கல்வித் துறையில் உள்ள கால இடைவெளியும் காலதாமதமும் தவிர்க்கப்பட வேண்டும். பல்கலைக் கழக நிர்வாகங்களும், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவும், உயர்கல்வி அமைச்சும் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையின் கருத்துக்குச் செவிசாய்ப்பது அவசியமாகும். இடைவெளியையும் தாமதத்தையும் தடுக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வது கட்டாயமும் அவசரமும் ஆனதாகும்.

1988 இறுதிக்குள்

# முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியை சோவியத் யூனியன் தெரிவு செய்யும்!

மாஸ்கோ, ஜூலை 2 சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சிறப்பு மாநாடு உணர்ச்சிகரமான சூழ்நிலையில் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

4, 991 பிரதிநிதிகள் இந்த நான்கு நாள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை மாநாடு ஆரம்பமானபோது சோவியத் தலைவர் மிக்செய்ல் கோர்பச்சேவ், ஜனநாயக அரசியல் சீர்திருத்தங்கள் அடங்கிய திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

அத்திட்டத்தை அமுல் நடத்தத் தேவையான ஆறு தீர்மானங்கள் மாநாட்டின் இறுதி நாளில் நிறைவேற்றப்பட்டன.

★ சோவியத் அரசில் எவரும் 10 ஆண்டுகளுக்குமேல் பதவியில் நீடிக்கக்கூடாது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் பதவிக்கும் இக்கட்டுப்பாடு பொருந்தும்.

★ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரே இனி நாட்டை நிர்வகிப்பார்.

தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றமே நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்யும்.

மாநாட்டின் இறுதியில் திரு. மிக்செய்ல் கோர்பச்சேவ் பேசினார்.

"ஜனநாயக அரசியல் சீர்திருத்தங்கள் தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும். அதில் இருந்து பின்வாங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை. அதற்கு மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். ஜனநாயக சீர்திருத்தங்கள் எக்காலத்திலும் விலக்கிக் கொள்ளாத முறையில் சட்டத்தில் இடம்பெறும்.

ஸ்டாலின் யுகத்தில் பழிவாங்கப்பட்டோர் அனைவரும் உரிய முறையில் கௌரவிக்கப்படுவர்"—

இப்படி திரு. கோர்பச்சேவ் தனது முடிவுரையில் தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான சகல ஜனநாயக அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளும் இந்த ஆண்டிற்குள் அமுல் நடத்தப்பட்டு விடும் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## ஷார்ப்வில் கைதிகளுக்கு கருணை காட்டுங்கள்!

கேப்டவுன், ஜூலை 2 ஷார்ப்வில் கொலை வழக்கில் ஆறு கறுப்பு இனத்தவர்கள் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்துச் செய்யும்படி தென்ஆபிரிக்க ஜனாதிபதிக்கு இறுதி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் முக்கிய சாட்சியாக விளங்கிய மக்மஹன் என்பவரே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது:

அன்புள்ள ஜனாதிபதி அவர்களே! எனது சாட்சியத்தில்தான் அறுவரும் குற்றவாளியாகக்காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டனர்.

அந்த வழக்கில் நான் பொய்ச் சாட்சியம்தான் அளித்தேன். பொலீஸாரின் சித்திரவதை தாங்காது பொய் சொன்னேன்.

எனவே அவர்களின் உயிரைக் காப்பாற்றுங்கள்.

இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. கடிதத்தின் பிரதி பிரதம நீதியரசருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

வெள்ளை நிற துணை மேயர் ஒருவரைக்கொலை செய்ததாக இந்த அறுவர்மீது விதிக்கப்பட்ட மரண தண்டனை இம்மாதம் 19ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

இத்தண்டனையை நிறைவேற்ற வேண்டாம் என்றுஉலகத்தலைவர்கள் தென்ஆபிரிக்க அரசுக்கு ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## அறிவிப்பு

மாஸ்கோ ஜூலை 2 ஆப்கனில் இருந்து சோவியத் துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்படுவது திட்டமிட்டபடி நடப்பதாக சோவியத் அரசு அறிவித்துள்ளது. (எ)

## வேண்டுகோள்

புடாபெஸ்ற் ஜூலை 2 ருமேனியாவில் வாழும் ஹங்கேரி இன மக்களை அவர்களின் குடியிருப்புக்களில்இருந்து வெளியேற்ற வேண்டாம் என்று ஹங்கேரி நாடாளுமன்றம் ருமேனிய அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. (எ)

வெளி உலகில்

## ஹங்கேரி ருமேனியா மோதல்

புக்காறஸ்ற், ஜூலை 2 ஹங்கேரியின் தூதரகத்தை உடனடியாக மூடிவிடும்படி ருமேனியா அரசு நேற்று உத்தரவிட்டது. 48மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேறும்படி ஹங்கேரியத் தூதரை ருமேனிய அரசு பணித்தது.

ருமேனியாவின் சில பட்டினங்களில் வாழும் ஹங்கேரிய இன மக்களின் உரிமைகள் பற்றி ஹங்கேரியாவின் தலைநகரான புடாபெஸ்டில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்தே இரண்டு நாடுகளுக்கு இடையேயான ராஜதந்திர உறவு சீர்கேடு அடையத் தொடங்கின.

வளைகுடா யுத்தத்தில்

## இரசாயன ஆயுதங்கள் பாவிப்பு! ஈரான் ஏற்றுக் கொண்டது!

பொன், ஜூலை, 2 வளைகுடா யுத்தத்தில் இரஸாயன ஆயுதங்களைப் பாவித்ததை ஈராக் பகிரங்கமாக முதற் தடவையாக ஒப்புக்கொண்டது.

ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸிஸ் செய்தியாளர் மாநாடு ஒன்றில், "ஈரான்தான் முதல் தடவையாக இரஸாயனங்களைப்பயன்படுத்தத் தொடங்கியது. அதற்குப் பதில் நடவடிக்கையாகவே ஈராக் அந்த ரக ஆயுதங்களைப் பயன்படுத்தியது"— என்று தெரிவித்தார்.

வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவே ஈராக் விரும்புகிறது, ஈரான் அரசின் நடவடிக்கைகளில் தான் அனைத்தும் தங்கியுள்ளது.

இதனிடையில், வளைகுடா யுத்தத்தில் அண்மைக்காலத்தில் தோல்விகள் அடைய வேண்டி நேரிட்டதாக ஈரான் ஏற்றுக்கொண்டது.

ஈரான் யுத்தக் கவுன்ஸில் இதனைத் தெரிவித்தது.

அமெரிக்கா,சோவியத் யூனியன் நாடுகள் மறைமுகமாக ஈராக்குக்கு ஆயுத உதவிகளை அளித்தன. அதன் காரணமாகவே ஈரானுக்கு பின்னடைவு ஏற்பட்டது என்று யுத்தக் கவுன்ஸில் தெரிவித்தது. (எ)

## நீடிப்பு

மனுகுவா, ஜூலை 2 மேலும் ஒருமாத காலத்துக்கு யுத்த நிறுத்தத்தை நீடித்திருப்பதாக நிக்கரகுவா அரசு தன்னிச்சையாக அறிவித்துள்ளது. (எ)

## கந்தசாமி உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்

### ஈரோஸ் கோருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 3 ரி. ஆர். ஆர். ஓ. பிரமுகர் திரு. கந்தசாமி உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்.

ஈரோஸ் விடுத்த அறிக்கையில்மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

தமிழ்பேசும் மக்கள் பாரிய இழப்புக்களைத் தாங்கி நடத்தி வந்த விடுதலைப் போராட்டத்தில் கறை படிந்த வரலாறுகளாக அவ்வப்போது இடம்பெறும் மர்மச் செயற்பாடுகள் அமைந்து விடுவது நாம் கண்ட அனுபவம் ஆகும்.

அவ்வகையில் கடந்த 19-6-88 ஞாயிறு முதல் பேராளர் திரு. கந்தசாமி காணாமல் போயிருக்கும் நிகழ்ச்சியானது அனைவரது நெஞ்சையும் பிழியும் ஒரு நிகழ்வு ஆகும்.

திரு. கந்தசாமி அமைப்புரீதியாக கடந்த 77 ஆகஸ்ட் முதல் எமக்கு நன்கு அறிமுகமானவர். அக்காலத்தில் எம்மால் நிறுவப்பட்ட கன்னட்டி மாதிரிப் பண்ணைத் திட்டத்திற்கு தன் முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கியதன் மூலம் எமது வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டவர். தமிழ்பேசும் மக்களின் நாளாந்த அவலத்தை அகில உலகமும் அறியும் படியாக ஒலிக்கச்செய்ய ஓயாது உழைத்தவர். மனித உரிமை பேணப் படுதலுக்காகவும் தமிழ் பேசும் மக்களின் நலனுக்காகவும், பாடுபட்டவர்.

இத்தகைய அன்னாரின் சேவைகளை நாம் நன்கறிவோம். அவரது கருத்துக்கள் சிலவற்றுடன் நாம் முரண்பட்ட போதும் பகைமை கொண்டதில்லை. அவற்றைப் பேசித் தீர்த்துக்கொள்ள முயன்றிருந்தோம் என்பது வெளிப்படையானது.

இருந்தும் அவர் காணாமல் போனதன் பின்னர் எமது அமைப்பே இச் செயலுக்குப் பொறுப்பானது என்ற தப்பபிப்பிராயம்சிலரால்பரப்பப் பட்டு வருகிறது என்பதை அறிகிறோம். சில வாரங்களுக்கு முன்னர் யாழ். பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற சில சம்பவங்களுக்கும், எமக்கும் தொடர்பிருப்பதாக ஒரு கருத்து பரப்பப்பட்டது.

நாம் மீண்டும் திட்டவட்டமாக மறுதலித்த போதும் இத்தகைய விசமத்தனமான பிரசாரங்கள் எமக்குஎதிராகமேற்கொள்ளப்பட்டு வருவதில் எமக்கு எதிரானசக்திகளின்செயற்பாடுகள் பற்றி உன்னிப்பாக அவதானிக்க வேண்டி இருக்கிறது.

திரு. கந்தசாமி காணமற் போனதற்கு எவர் காரணமாக இருப்பினும் என்ன காரணத்துக்காக கடத்திச் சென்றிருப்பினும், அவரை உடனடியாக விடுவிக்க வேண்டுமென பணிவாக வேண்டுகிறோம்.

இப்படி அறிக்கையில் [illegible]

## மினி சினிமா: பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம். ஜூலை,3 யாழ். மாவட்ட மினி சினிமா சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு நடைபெறும்.

சங்கத் தலைமைக் காரியாலயத்தில் (உஷா சினிமா) நடைபெறும் இக் கூட்டத்தில் மினி சினிமா உரிமையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி யாழ் மாவட்ட மினிசினிமாச் சங்கத் தலைவர் அவசர அழைப்பு விடுத்துள்ளார். (க-சி)

# அந்தோனியாருக்கு இன்று புங்குடுதீவில் விழா

புங்குடுதிவு, ஜூலை 3 கத்தோலிக்க திருச்சபையானது புனிதர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஆண்டு தோறும் அவர்களுக்கு விழாவெடுத்து அதன் மூலம்இறை நம்பிக்கையையும்,வாழ்வையும் மக்கள் அறிந்துகொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் வழிஅமைத்துள்ளது.

அந்தவகையில் கோடி அற்புதங்களைப் புரிந்து வருபவரான அந்தோனியாருக்குப் புங்குடுதீவில் இன்று விழா எடுக்கப் படுகின்றது.

புங்குடுதீவின் தென் கரையில் நெய்தல்வள நிலத்தில் அமைந்திருக்கும் அந்தோனியார்ஆலயம் அரை நூற்றாண்டைத் தாண்டிய ஒன்றாகும்.

சமயப்பற்றும் தமிழ்ப் பற்றும் நிறைந்த சூழலில் இது அமைந்துள்ளது. கத்தோலிக்க மதத்தை ஐரோப்பிய மதம் என்று ஒதுக்குபவர்கள் இந்த ஆலயத்தைத் தரிசித்து வெளியேறும்போதும் விழாவில் பங்கு கொள்ளும் போதும் தம்மை மறந்து பற்றுக்கொண்டு பங்கு கொள்வர்.

காரணம் எமது நாட்டின் பண்பாடு, கலா

-மலர் மன்னன்-

சார நெறிகள் இங்கு கடைப்பிடிக்கப்படுவதால் மக்கள் வேற்றுமையை மறந்து சத்தியத்தைத் தேடத் தொடங்குகின்றார்கள்.

இந்த ஆலயம் சமயப் பணியோடு நிற்காது சமூகப்பணி, இலக்கியப் பணி கிளைப்பணி என்பனவற்றிலும் முன்னின்று உழைக்கின்றது.

ஆலயத்தைச் சேர்ந்த மக்களிடம் உரையாடும் போது 'புனிதருடைய பணியில் இறைவனைத் தேடுவோம், அவரை வேண்டினால் யாவும் கிடைக்கும்' என நம்பிக்கையோடு கூறுவார்கள். (இ)

மறையில் தெளிவும், தமிழ் ஆர்வமும் கொண்ட தவத்திரு ரீ. யேசுதாசன் (சந்திரன்) அடிகள் இந்த ஆலயத்தின் குருவாக இருந்து பணியாற்றுகின்றார்,

## சங்காபிஷேகமும் மணவாளக் கோலமும்

யாழ்ப்பாணம் ஜூலை 3 யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோவில் (பன்றிக்கோட்டுப்பிள்ளையார்) அஷ்டோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும் இன்று 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறும். (இ-சி)

## காட்டுத்துறை விநாயகர் மகோற்சவம்

மானிப்பாய் ஜூலை 3 வண்ணார்பண்ணை-காட்டுத்துறை அருள் மிகு அம்பலவாண ஸ்ரீ விநாயகர்கோவிலில் இவ்வாண்டு முதன்முறையாக மஹோற்சவ விழா நடைபெறவுள்ளது.

இன்று 3ஆம் திகதி துவஜாரோகணமும் (கொடியேற்றமும்) 11 ஆந்திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவம், மாலை துவஜாவரோகணமும் (கொடியிறக்கமும்) ... நடைபெறும். (இ-90)

## இயங்குகிறது

கோப்பாய் ஜூலை -3 கோப்பாய் வடக்கு வெங்காயச் சங்கத்தில் இயங்காமலிருந்த விவசாய விற்பனை நிலையம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. (இ-72)

# நிதி நிறுவனங்களில்---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தயாராக உள்ளது.

1979 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க நிதிநிறுவனச் சட்டத்தின் கீழ் அனுமதி பெற்ற 72 நிதி நிறுவனங்கள் உள்ளன.

இத்துறையில் பொது மக்கள் வைப்புச் செய்துள்ள பணத்தில் சுமார் 90 சதவீதம் பத்து நிதி நிறுவனங்களில் உள்ளன.

சில நிதி நிறுவனங்கள் அவற்றில் பணத்தை வைப்புச் செய்தவர்களுக்கான கட்டுப்பாடுகளை நிறைவேற்றத் தவறி உள்ளன.

சில நிதி நிறுவனங்களின் ஒழுங்கீனங்கள், நேர்மையற்ற நடவடிக்கைகள் குறித்துப் பொதுவாகப் பிரசாரஞ் செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பொதுமக்கள் நிதி நிறுவனங்கள் பற்றிக் கவலை கொள்ளத் தொடங்கி உள்ளனர்.

நல்ல முறையில் இயங்கும் நிறு நிறுவனங்கள் குறித்து மக்கள் அவநம்பிக்கை கொள்ளத் தேவையில்லை.

மக்களின் வைப்புப் பணத்தைப் பாதுகாப்பதற்காக- நிதி நிறுவனங்களின் விடயங்களில் தலையிடு செய்வதற்கு மத்திய வங்கிக்குச் சட்டபூர்வ அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### மத்திய வங்கிக்கு அதிகாரம்

தவறிழைக்கும் நிதி நிறுவனங்களின் செயற்பாட்டை மத்திய வங்கி இடைநிறுத்திவைக்கும்; அல்லது அவற்றின் நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளும். அவசியமேற்பட்டால் அவற்றைக் கலைத்துவிடும் அதிகாரமும் மத்திய வங்கிக்கு உண்டு.

நிதி நிறுவனங்களின் நிதி ஸ்திரப்பாட்டைப் பேணுவதற்கும்-

அவற்றில் பணம் வைப்புச் செய்தவர்களுக்கு மேலும் கூடுதலான பாதுகாப்பை வழங்கவும் அரசாங்கம் பல விரிவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வங்குரோத்து நிலையை அடைவதைத் தடுப்பதற்கு எந்தஒருநிதிநிறுவனத்துக்கும் அவசரஉதவி வழங்க மத்திய வங்கி தயாராக உள்ளது.

எனவே பொதுமக்கள் வீணாகக் கவலை அடையத் தேவையில்லை.

வங்குரோத்து நிலையை அடையும் நிதி நிறுவனங்களில் பணம் வைப்புச் செய்தவர்களின் பணம் திரும்ப அவர்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். இதற்கு நாம் உறுதிகூறுகின்றோம்.

செயலிழந்த நிதிநிறுவனங்களை அரசு உயிர்ப்பிக்கும்.

செயல்பட முடியாமல் கஷ்டப்படும் நிதி நிறுவனங்களுக்கும் அரசு புத்துயிரூட்டும்.

இவற்றிற்கு அரசுநிதி உதவி வழங்கும்.அதைப் பயன்படுத்தி இந்த நிதி நிறுவனங்கள் தங்களிடம் வைப்புச் செய்தவர்களுக்கு வைப்புச்செய்யப்பட்ட பணத்தைத் திருப்பிக்கொடுக்க முடியும்.

செயலிழந்த — செயல்படக் கஷ்டப்படுகின்ற- நிதிநிறுவனங்களுக்கு அரசு வழங்கும் உதவியைத் தவறாகப் பயன்படுத்தினால் அந்த நிதி நிறுவனங்கள் தண்டனையில் இருந்து தப்ப முடியாது.

ஏழைகளின் சேமிப்பைச் சுரண்டும் நிறுவனங்கள்மீது போதுமான சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடியதாக விதிகள் புதிய சட்டத்தில் உள்ளன.

இப்படி பதில் நிதி அமைச்சர்சொன்னார். (உ-ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ சேட்டிங் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்

யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.



# உதயன்

03 - 07 1988 ஞாயிற்றுக்கிழமை



திருமண சேலைகளுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுர ✶ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.



உ
ஸ்ரீராமஜயம்

## விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் விபவ வருஷம் ஆனி மாதம் 22 ஆம் திகதி (6-7-88) புதன்கிழமை சப்தமிதிதியும், உத்தரட்டாதி நக்ஷத்திரமும் சித்த யோகமும் சுபஹோரையும்கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7-15 மணிமுதல் 8-30 மணிக்குள் வரும் கடகலக்ன சுபமுகூர்த்தத்தில்

எமது கனிஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
**சரஸ்வதிதேவியை**

எமது கனிஷ்ட புத்திரன்
சிரஞ்சீவி
**ராஜகோபால சர்மாவுக்கு**

கன்னிகாதானம்செய்து, மாங்கல்ய தாரணம் செய்வதாய் ஸ்ரீ விநாயகப் பெருமானின் கிருபையை முன்னிட்டு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் குரு வருளுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு ஷெ முகூர்த்தம் 33, கடைச்சாமி கோவில் வீதி, நடேசர் கோவில் 'தாரிணீ பவனத்'தில் நடைபெறுவதால் தாங்கள் இஷ்ட மித்ர பந்துக்களுடன் வந்திருந்து சுபமுகூர்த்தத்தை நடாத்தி வைத்து தம்பதிகளை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்

சமாவர்த்தனம்,- 6-7-88 அதிகாலை 4-00 மணிக்குமேல் மணமகனின் இல்லத்தில் நடைபெறும்.

வரவேற்புபசாரம்:- மணமகனில்லத்தில் 7-7-88 வியாழக்கிழமை பகல் 12-00 மணிக்குமேல் 6-00 மணிவரை நடைபெறும்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

ஸ்ரீமான் - ஸ்ரீமதி
கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்

ஸ்ரீமான் - ஸ்ரீமதி
வை. மு. பரமசாமிக்குருக்கள்

வரவேற்பாளர்கள்

ஸ்ரீமான் - ஸ்ரீமதி
K. K. கோபாலன்
"தாரிணீ பவனம்"
33, கடைச்சாமி கோவில் வீதி,
நடேசர் கோவில், நீராவியடி.

ஸ்ரீமான் - ஸ்ரீமதி
ப. முத்துக்குமாரசாமிக் குருக்களும்
சகோதரர்களும்
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(இருவீட்டார் அழைப்பு) (5768)



CHARTERED ACCOUNTANCY
LICENTIATE 1-EXAMS
பயிற்சி நெறி 2 பிரிவுகளாக
ஆரம்பமாகி உள்ளது

Sept - 88 வாரநாட்கள்
March - 89 வார இறுதி நாட்கள்

"Students Registrations" எம்மால் கையாளப்படும்.

விபரங்கட்கு
North Ceylon
Technical Institute
14, St. Peters Lane, Hospital Road,
JAFFNA.

(சி-5590)


## தொழிற்சாலை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

க அனேகமாக ஜெய்ப் பூர் கால்தொழிற்சாலைக் கான கட்டடம் ஒன்றை நிர்மானிப்பதற்கு பிரிட் டிஷ் தூதரகம் நிதியுதவி வழங்கலாம் என அன்னை யர் முன்னனிவட்டாரங் கள் நம்பிக்கைகொண்டு ள்ளன.

திரு.ஜோன்ஸ் அன்னை யர் முன்னணியுடன் நடத்திய கலந்துரையா டலின் போது நம்பிக்கை தரும் சில தகவல்களை தெரிவித்ததாக அதே வட்டாரங்கள் உதய னுக்கு வெளிவித்தன.

(ஓ-க)

## சென்னை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்த விடயங்கள் குறித்து இந்திய அதிகா ரிகள் சென்னையில் கிட்டு வுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகக் கொழும் பில் உள்ள இந்தியத் தூதரகத்துடன்தொடர் புடைய வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன,

(அ-உ)

## துணை வேந்தர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படவுள்ளன.

துணைவேந்தர் பதவி க்கு பேராசிரியர் சிவ ஞானசுந்தரத்தின் பெயர் மூன்றாவதுமுறை யாகவும் பேராசிரியர் துரைராஜாவின் பெயர் இரண்டாவது முறையா கவும்பேராசிரியர் கணேச லிங்கத்தின் பெயர் முத லாவது முறையாகவும் பார்சு செய்யப்படுவதும் குறிப்பிடத் தக்கதாகும்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீ காரத்திற்கு இம் மூவரது பெயர்களும் அனுப்பி வைக்கப்படுகின்றபோதி லும், உபவேந்தராக யாரை நியமிப்பது என் பதை உயர்கல்வி அமைச் சரான ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த் தனவே தீர்மானிப்பார்.

(ஓ-5)

## விடுதலை.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படும் என்று கூடிநின்ற இளைஞர்களி டம் உறுதியளித்தார்.

இதனை அடுத்து இளை ஞர்கள் கலைந்து சென் றனர்.

விடுவிக்கப்பட்ட அனை வருக்கும் இரண்டாயிரம் ரூபா வீதம் வழங்கப்படு மென்றும் மூன்று மாதங் களுக்கு தொடர்ச்சியாக உணவுப் பொருள்கள் வழங்கப்படுமென்று அர சாங்க அதிபர் உறுதி அளித்தார்.

கோட்டையினுள்தான் சிங்கள மக்கள் பலர் அகதிகளாகத் தங்கி இருக்கின்றனர். இங்கே தான் ஸ்ரீலங்கா இராணு வத்தின் பெரிய முகா மும் இருக்கின்றது.

(ஓ-150)

## நாய்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மருந்தை யாழ். சுகா தாரத் திணைக்களம் வழங்கவுள்ளது.

நாளை 4-ஆம் திகதி முதல் 8-ஆம் திகதி வரை யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட எட்டு இடங்க ளில் வைத்து இந்த தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படும்.

எனவே யாழ். மாநக ராட்சிமன்ற எல்லைக்குள் வசிக்கும் பொது மக்கள் தங்கள் நாய்களை தடை மருந்து ஏற்றும் நிலையத் துக்குக் கொண்டு சென்று தடுப்பு ஊசியை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

(ஓ-10)

## மரண அறிவித்தல்கள்

### முத்துச்சாமி செல்லையா
(காத்திப்பிள்ளை)

சித்தங்கேணி உலுணவளையைச் சேர்ந்த காத்திப்பிள்ளை என்றழைக்கப்படும் முத்து சாமி செல்லையா காலமானார். இவர் காலம் சென்ற கண்ணும்பிகையின் அன்புக்கணவரும், இந்திராணி (மலேசியா), புஷ்பராணி (மலே சியா), செல்வராணி, கௌரி, மனோகரி, யோகேஸ்வரி, சிவானந்தன் (நியாட்), லீலா வதி ஜெயானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (மலே சியா), கனகரத்தினம் (மலேசியா), நவரத்தி னம் (அபிவிருத்திச்சபை வட்டுக்கோட்டை), இராசரத்தினம்(இ.போ.ச.மன்னார்), கணேச ராசா (கே.ஜீ இன்டஸ்றிஸ் ஹெந்தலை),ரஞ் சினி, ஸ்கந்தமயம் ஆகியோரது அன்பு மாம னாரும், காலம் சென்ற இராசபாக்கியம் (மலே சியா), இரத்தினம் (மலேசியா), செல்வரத்தி னம் (மலேசியா),கனகாம்பிகை (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைத்திய கலாநிதி முத்துக்கிருஷ்ணலிங்கம்(மலேசியா), வைத்தியகலாநிதி கணேசலிங்கம்(மலேசியா), பத்மினி (மலேசியா), சிலரூபி (மலேசியா), சிவயோகினி (மலேசியா), சோபனா உதய கரன், திவிசா, கஜேந்திரா, கிரிதரன் ஆகியோ ரின் அன்புப் பேரனுமாவார். ஈமச்சடங்கு அவரது இல்லத்தில் 3-7-88ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று திருவடி நிலை யில் தகனம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தக வலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் கொடுப்பவர்;
**நவரத்தினம்.**
[அபிவிருத்திச்சபை, வட்டுக்கோட்டை]
( 5160 )

### பேராசிரியர் கலாநிதி ஆ. சதாசிவம்
(இலங்கை பல்கலைக்கழகம் — பேராதனை)

அராலியூரைப் பிறப்பிடமாக கொண்ட வரும், 11 சின்சம்பா வீதி. வெள்ளவத் தையை வசிப்பிடமாக கொண்டவரும்,பேரா தனை பல்கலைக்கழக தமிழ் பேராசிரியருமான கலாநிதி ஆறுமுகம் சதாசிவம் 1-7-88 வெள் ளிக்கிழமை மாரடைப்பினால் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2. 00 மணியளவில் உடையார் வளவு வீமன்காமம், தெல்லிப் பழை என்ற அன்னாரின் இல்லத்தில் நடை பெறும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**
(5772)

### பொன்னையா தேவதாசன்

இணுவில் பொன்னையா தேவதாசன் (பொறியியலாளர்) 2-7-1988 இல் காலமாகி விட்டார்.

இவர் சண்டிலிப்பாய் காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னையா தங்கரத்தினம் தம்ப திகளின் சிரேஷ்ட புத்திரரும் தேவராஜினி பிரேமதாசன், ஜெகதாசன் (டென்மார்க்), ஆகியோரின் சகோதரரும் ச. சிவநேஸ்வரன் (ஆசிரியர் B. Com, புத்தளம்) அவர்களின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரிகை 3-7-88 இன்று பிற்பகல் 1 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெறும். சிநேகி தர், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வேலுப்பிள்ளை.**
இணுவில் தெற்கு, இணுவில்.
( 5769 )

### தம்பிமுத்து இரத்தினபூபதி

சுதுமலை மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலம் சென்ற விரசிங்கம் தம்பிமுத்து ஆசிரியரின் மனைவியும், கிளி நொச்சி அரியநாயகம் கமத்தின் உரிமையாள ருமான இரத்தினபூபதி காலமானார். இவர், சுந்தரராசா குணமணி, பூபாலபிள்ளை குண மலர்,சிவசூரியர் குணதேவி, இராசரத்தினம் குணலோகநாயகி ஆகியோரின் தாயாரும்; சிவபாதசுந்தரம் குணவதியின் சிறியதாயா ரும், சிந்தாமணி செல்லம்மா, பத்மநாதன் இராசம்மா, சின்னத்தம்பி இராசமணி, செல்லையா இராசையா, கணேசபிள்ளை அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரி யுமாவார்.

இவரின் ஈமக் கிரிகைகள் 1988-07-03 நண்பகல் 12. 00 மணியளவில் சுதுமலையில் நடைபெறும். உறவினர் நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

**குடும்பத்தினர்**

"குணவாசா"
சுதுமலை தெற்கு
மானிப்பாய்.
(5158)

## OBITUARY

### Mr. WILLIE MATHER

The death is announced of Mr. Willie Mather dearly beloved husband of Winefred (Winnie) brother of the late Parimalam, late Athisayam, B'am, late Wycliffe, late Jessie, late Sammy, Pauline, Quintus, and late Ranie.

Brother-in-law of the late Reggei Edwards, Daisy and Jeyam Gnanapragasam, Dan & Pushpam Edwards, Sylvia, late Sam Kadirgamar, late Dr. I. T. Kunaratnam, Navamanie, late Dr. E. A. Lawrence, late Justin Chinniah, Eta, and late Rajah Asirwatham.

The Cortege will be removed from his residence at **No. 6, St. Annes Church Road, Chundikuli at 10 a. m. on Monday the 4th of July 1988 for internment at Thundi Cemetry.**

[5763]

### VISVAN (Accountant)

VISVAN (Accountant) Beloved son of Mr. & Mrs. Saravanamuthu Muttiah - retired Deputy Conservator of Forests (Presently attached to F.A.O. Rome), loving brother of Yasmin, Ranjan and Suntheran. Grandson of late Mr. & Mrs. Muttiah (Retd. Chief Inspector of Excise) nephew of Mrs. Sita Clough Jayasingham, Indran, Dr. Ravi & Dr. Logan Muthiah died under tragic circumstances in Frakfurt W. Germany. Funeral took place in Germany. Relations and Friends please accept this Intimation.

Mrs. S. Clough Jayasingham
474, Main Street,
Jaffna.
(5770)

### திருமதி கந்தையா சாந்தநாயகி

சரசாலையை பிறப்பிடமாக கொண்டவரும் 11, சிவசுந்தரம் வீதி, கிளிநொச்சியில் வசித்த வருமாகிய திருமதி கந்தையா சாந்தநாயகி 1 - 7 - 88 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்ற கிளிநொச்சி கிராம அதிகாரி முகாந்திரம் சி. வெற்றி வேலு இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலம் சென்ற கிளிநொச்சி கிராம அதிகாரி செல்லத்துரை கந்தையாவின் அன்பு மனைவியும் காலம் சென்ற டாக்டர் விவே கானந்தன், சச்சிதானந்தன், சிவானந்த ராசா, வேலாயுதபிள்ளை (நவம்), குகனேஸ் வரி, கௌரிதேவி (மே. ஜெர்மனி) குகானந் தராசா (மே. ஜெர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் P. தர்மபாலன் (கிராம சேவையாளர் கொக்குவில் மேற்கு) P. பர மேஸ்வரன் (மே. ஜெர்மனி), திருமதி வி. மங்கயற்கரசி, திருமதி ச. தவமணிதேவி ஆகி யோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 3 - 7 - 88 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு தகனக் கிரியை களுக்காக கிளிநொச்சி பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இத் தகவலை ஏற் றுக் கொள்ளவும்.

தகவல்,
**க. வேலாயுதபிள்ளை**
**(நவம்)**
(5765)


புதுக்கடை திறப்புவிழா

அன்புடையீர்

நிகழும் விபவ வருஷம் ஆனி மாதம் 20 ஆம் திகதி (4-7-1988) அன்று திங்கட் கிழமை பகல் 10.24—12.03 மணியளவில் வரும் சுபவேளையில்

"யுனிரோன்"
பிஸ்னஸ் என்ரர்பிறைஸ்

எனும் மின்சார உபகரண வியாபார ஸ்தாபனத்தை நடாத்த இருப்பதால் அவ் வமயம் தாங்களும் வருகைதந்து சிறப்பிக்கு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்:
T. N. பாலபாஸ்கரன்
(கோணேஸ்)
3, கே. எஸ். வீதி, தட்டாதெருச்சந்தி,
யாழ்ப்பாணம்.

(5761)



Wanted Account Clerk

கொழும்பில் வேலைபார்க்கக் கூடிய குமாஸ்தா உடனடியாகத் தேவை. ஆங்கில அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. தங்கும் வசதி செய்து கொடுக்கப்படும்

4-7-88 திங்கள்
தொடர்பு கொள்ளவும்.
101, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.

(C 56..1)



ஓம்
முருகா

V. J. S. EXPRESS

ஸ்தாபனத்தார் அறிமுகப்படுத்தும்
புதியதொரு சேவை

யாழ்/ கொழும்பு பஸ் சேவை

இச்சேவை தினசரி பகல் 12 மணிக்கு
யாழ். பஸ் நிலையம் முன்பாகவும்
பகல் 12.30 மணிக்கு கண்டி றோட்,
பிரதம தபால் கந்தோர்
முன்பாகவும் இருந்து புறப்படும்.

அறிமுக பஸ் கட்டணம்
ரூ. 100/- மட்டுமே

இச்சேவைக்கு ஆசனம் பதிவு செய்யப் பட மாட்டாது. பஸ் புறப்படும்போது டிக்கெட்டுக்களை பஸ்ஸிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். அலுவலகம்:
113, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தலைமை அலுவலகம்:
41, விவேகானந்த வீதி, கொழும்பு 6.
தொலைபேசி: [illegible]

(C/5623)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 03 - 07 - 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Sunday 03 rd July 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org